# காணாமல்போன 'ஐரிஸ்மோனா' கப்பலை மீட்டுத்தர சர்வதேசசெஞ்சிலுவைசங்கத்திடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)
முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்படும் ஐரிஸ் மோனா' கப்பலை மீட்டுத் தரும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக் கப்பல் முல்லைத்தீவு கடற்பரப்பில் நங்கூரமிட்டிருப்பதாகவும் ஆனால் அக்கப்பலுடன் தொடர்பை ஏற்படுத்த கடற்படையினரால் முடியாமலிருப்பதாகவும் அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இக்கப்பலில் எட்டுச் சிப்பந்
(6-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 6-00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 16 இதழ் 209
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 01 - 09 - 1995

## ஐரிஸ்மோனாவின் நிலை பற்றி அரசு பெரும் குழப்பம்

(யாழ்ப்பாணம்)
'ஐரிஸ் மோனா' கப்பல் காணாமற்போனது தொடர்பாக முன்னுக்குப்பின்முரணான தகவல்களை அரசு வெளியிட்டு வருகின்றது.

கப்பல் தற்போது நிற்கும் இடம் தமக்குத் தெரியாது எனக் கூறும் அரசு அதேவேளை
(6ம் பக்கம் பார்க்க)

## நிலாவெளியில் வீரச்சாவடைந்த மாவீரருக்கு இன்று வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்
கடந்த 28ம் திகதி திருமலை மாவட்டத்தில் நிலாவெளிப் பகுதியில் ஸ்ரீலங்கா பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். தமி
[5ம் பக்கம் பார்க்க]

# இந்தியப் படையால் இயலாதபோது இலங்கை அரசினால் 'பிரபாவை எப்படி கைதுசெய்ய முடியும்?

## ஸ்ரீமாவோ ராய்ட்டருக்கு பேட்டி

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க முடியும் என்ற நம்பிக்கை சிறிதளவேனும் தனக்கில்லை என பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார். [6ம் பக்கம் பார்க்க]

## பாலியல் வன்முறைக்கு மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)
பதினொரு வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியவருக்கு தமிழீழநீதிமன்றம் நேற்று மரண தண்டனை (சாவொறுப்பு, வழங்கப்பட்டது
(2ம் பக்கம் பார்க்க)

## பஞ்சாப் முதலமைச்சர் பியாந்த்சிங் கார் குண்டு வெடிப்பில் பலி

(புதுடில்லி)
பஞ்சாப் முதலமைச்சர் பியாந்த்சிங் நேற்றுமாலை சண்டிகாரில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பொன்றில் கொல்லப்பட்டார்.

பஞ்சாப் மாநில அரசு தலைமைச் செயலகத்தின் முன்னால் நேற்று மாலை இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பில் முதலமைச்சரின் மெய்ப்பாதுகாவலரான மூன்று கமோண்டோக்கள் உட்பட மொத்தம் பன்னிரண்டு பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் படுகாயமுற்றனர்.

பியாந்த்சிங் முன்னர் இரா
[6ம் பக்கம் பார்க்க)

## ராமராவ் பதவி விலகினார் நாயுடு முதல்வராகிறார்

(ஹைதராபாத்)
ஆந்திர பிரதேஷ் முதல்வர் திரு. என். டி. ராமராவ் நம்பிக்கை வாக்குகளைப் பெறுவதற்கு ஒரு கிலமணி நேரத்திற்கு முன் முதலமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

திரு. ராமராவின் ராஜினாமா கடிதத்தை ஆளுநர் பெற்றுக்கொண்டதையடுத்து நம்பிக்கை வாக்கெடுப்பிற்கான தேவையில்லாது போய்
(5-ம் பக்கம் பார்க்க)

## 158 றிசேர்வ் பொலிஸார் மட்டக்களப்பில் பதவிவிலகினர்

(மட்டக்களப்பு)
விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் தாக்குதலையடுத்து மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து 158 றிசேர்வ் பொலிசார் பதவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் தொடரும் யுத்த முனைகளில் தமமால் தொடர்ந்து கடமையாற்ற முடியாமல் உள்ளதாக பதவி விலகிய றிசேர்வ் பொலிசார் பொலிஸ் நிலையத்திற்கு கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக 5 வருடங்கள் கடமையாற்ற வேண்டியிருப்பதாலேயே தாம் பதவி விலகியுள்ளதாகவும் அவர்கள் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளனர்
(6ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் அலுவலகமருகில் துப்பாக்கிச் சூடு

### ஐவருக்கு படுகாயம்

(கொழும்பு)
பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைமைக் காரியாலத்துக்கருகில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைமையகத்திலுள்ள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் அலுவலகத்துக்கு அருகில் சந்தேகமான முறையில் ஒருவர் நடமாடியதாகவும் அவரை பொலிசார் விசாரிக்க முயன்ற சமயம்
(6ம் பக்கம் பார்க்க)

## ஐந்து கடற்படையினரின் சடலங்கள் ஐ.சி.ஆர்.சி.மூலம் அரசிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)
முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை இரு சுப்பர்டோறா பீரங்கிப் படகுகள் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்ட சமயம் கொல்லப்பட்ட கடற்படை மாலுமிகளில் ஐவரின் சடலங்கள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன

விடுதலைப் புலிகள் இச் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அரசிடம் ஒப்படைத்தனர்

இவை தற்பொழுது கொழும்பு சவச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாக கடற்படை அதிகாரி ஒருவர் நேற்று மாலை தெரிவித்தார். க-கி

## ஹெலி, யுத்த விமானம் மீது புலிகள் தாக்குதல்

(அம்பாறை)
அம்பாறை கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் விமானப் படைக்குச் சொந்தமான தாக்குதல் விமானம் ஒன்றின் மீதும் உலங்கு வானூர்தி மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தியுள்ளதாக விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலின்போது இவையிரண்டும் மயிரிழையில் தப்பிவிட்டன.

கடந்த ஞாயிறன்று கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படை
(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பைல் அலுமாரி (File Cabinet) புத்தகமேசை, புலி. படம்பளம் விற்பனைக்குண்டு. ராஜன் பின்னலகம், 2/6, அருச்சுனு வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம்.

(எ-5237)

### தேவை

அன்றாடக்கணக்குவகைகளை எழுதி திட்டம் கட்டக்கூடிய பில்கிளாக் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் ரவர் கோப்பி பார், வெலிங்டன் சந்தி, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

[ஏ-5242]

விஸ்வ குலத்தைச் சேர்ந்த விக்னஸ்வரன் அவர்கட்கு 2-ம், 3-ம் படி விஸ்வகுல கர்ம மந்திரங்களை (தீட்சை) கற்றுக் கொடுப்பதற்கும், ஐப்பசியில் பூநூல் சடங்கு முறையே கொடுப்பதற்கும் அதே குலத்தைச் சேர்ந்த குரு ஆச்சாரி தேவைப்படுகிறார் எல்லாச் செலவும் ஏற்கப்படும் இலக்கம்: 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[சி-1644]

### பலவித பொருட்கள்

சகலவிதமான துவிச்சக்கர வண்டிகளும், உதிரிப்பாகங்களும். சிற்றிசன், சீக்கோ, காஸ்ஸியோ கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள், சுடுதண்ணீர்ப்போத்தல், சகலவிதமானரோசலைற், விளையாட்டுப் பொருட்கள் (Sport Goods) சகாய விலையில் பெற்றுக்கொள்ள: புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்), 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-5244)

# உதைபந்தாட்ட இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிகொலின்ஸ்விளையாட்டுக்கழகம் நடாத்திவந்த 19 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமைமாலை நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்திற்கு முன் நடைபெறும் காட்சி உதைபந்தாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து வல்வை ஒற்றுமையும் இறுதியாட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை ஒற்றுமையும் மோதவுள்ளன.

இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நெல்லியடி ம.ம.வி. அதிபர் திரு: சிற்றம்பலம் கலந்துகொள்வார். -சி

# ஹாட்லி நூலக எரிப்பு வாரம் இன்று ஆரம்பம்

(நெல்லியடி)

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி நூலக எரிப்பு வாரம் இன்று 1-9-95 முதல் 7-9-95 வரை நினைவு கூறப்படவுள்ளது.

பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள நூலக வார இறுதி நாளன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. வே. பாலகுமார் கலந்து கொள்கிறார்.

இந்நூலகம் கடந்த 1985ம் வருடம் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் எரியூட்டப்பட்டு அங்குள்ள நூல்கள் அனைத்தும் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும், 160-கி

# கூட்டுறவு இளைஞர் அமைப்பை ஏற்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பூநகரி பல நோக்கு கூட்டுறவு சங்கம் கூட்டுறவு குழுக்களை அமைக்கவுள்ளது.

கூட்டுறவு பற்றிய விழிப்புணர்ச்சியை இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தும் முகமாகவே இக்குழுக்கள் அமைக்கப்பட இருப்பதாக சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்

கல்வி, கலாச்சாரம், விளையாட்டு, கூட்டுறவு சங்கத்தில் பங்கேற்றல் ஆகியவற்றில் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து கூட்டுறவு சங்கங்களில் அவர்களை அதிகளவு ஈடுபாடு கொள்ள வாய்ப்பளிக்கப்படும் எனவும் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். 170 கி

## மீனவர்கள் பாதிப்பு

(அரியாலை)

குடாநாட்டு கடல் பகுதியில் கடற்படையினரின் அட்டகாசம் கடந்த சிலதினங்களாக அதிகரித்துள்ளது அராலி கடல் பகுதி, செம்பியன்பற்று அடுத்துள்ள மாமுனைப்பகுதி, மண்டைதீவுகடல்பகுதி ஆகியவற்றில் கடற்படையினரும், இராணுவமும் மேற்கொள்ளும் இத்தாக்குதல்களால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடையிடையேபீரங்கித்தாக்குதலும் இக்கடற்பகுதிகளில் நடைபெற்று வருகின்றது. 59-கி

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

அ: சிரேட்ட உதவி நூலகர் பதவிக்கு முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புடன் பதினொரு ஆண்டு அனுபவமுடைய பட்டதாரிகளிடமிருந்தும்.

ஆ. உதவி நூலகர் தரம் I பதவிக்கு ஐந்தாண்டு அனுபவமுடைய பட்டதாரிகளிடமிருந்தும்

இ- உதவி நூலகர் தரம் II பதவிக்கு முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு ஆனர்ஸ் பட்டத்தைப் பெற்றவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்; கல்வித் தகைமைகள், அனுபவம் ஆகியன பற்றிய மேலதிக விபரங்களுக்கு பிரதிப் பதிவாளர் (தாபனம்) உடன் தொடர்பு கொள்ளவும்; விண்ணப்பங்கள் 1995-09-28 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:-

சிரேட்ட உதவி நூலகர் ரூபா 12,725-8X325-15,325/- (மாதமொன்றிற்கு)

உதவி நூலகர் தரம் 1 ரூபா 10,650-5X325- 12,275/- (மாதமொன்றிற்கு)

உதவி நூலகர் தரம் 11 ரூபா 6,050-10X250 - 8,550/- (மாதமொன்றிற்கு)

குறிப்பு:

அ) 1993 மே 12ஆம் திகதி 9/93 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

ஆ) நிரந்தரப் பதவியொன்றிற்கு ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படை சம்பளத்தின் 10%மும் 'புத்தகப் படியாக' ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் பணமாகச் செலுத்தப்படும்.

இ) 1995 டிசம்பர் 31ஆம் திகதி வரை 'நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக' மேற்குறித்த சம்பளத்திலே 25 சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக் கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தில தாபனக் கிளை பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்:

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் /நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 02/- ரூபா முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச. மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும், கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெரு, 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கத்திலும் பெற்றுக் கொள்ளலாம்;

அரசாங்க திணைக்களங்கள் அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்,

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில், வைக்கப்படுவர்.

ஒப்பந்த அடிப்படையான நியமனமும் கவனிக்கப்படும் ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பிப்பவர்கட்கும், அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கட்கும் வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.

நூலகவியல் கணனியைப் பிரயோகித்தல் பற்றிய செயல்முறை சார்ந்த அறிவு / கணனி விஞ்ஞான அறிவு உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்;

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்;
திருநெல்வேலி;
யாழ்ப்பாணம்
1995-08-14

(எ 5243)

## பாலியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமத்தைச் சேர்ந்த 65 வயது நிரம்பிய விநாயகமூர்த்தி என்பவர் 11 வயதுச் சிறுமியை ஆசை காட்டித் தனது இச்சையைத் தீர்த்துக் கொண்டதுடன், சிறுமிக்கு அறிவு வளர்ச்சியடைந்து அவரது விருப்பத்திற்கு மறுப்புத் தெரிவித்தவேளையில், முன்னைய நிகழ்வுகளை வைத்து அச்சுறுத்தலும் செய்துள்ளார். இவை தொடர்பான நிகழ்வுகள் உண்மை எனக் கண்ட யாழ்ப்பாண மன்றின் குற்றவியல் நீதியாளரால் தமிழீழ சட்டக் கோவையின் பக்கம் 30 பிரிவு 01 உப பிரிவு 'உ' இன் பிரகாரம் 14 வயதைப் பூர்த்தி செய்யாத பெண்ணின் இசைவைப் பெற்றும் பெறாமலும் செய்துகொள்ளப்படும் உடல் உறவு, பாலியல் வல்லுறவு எனும் வரைவிலக்கணத்திற்கு அமைவாக அதே பக்கத்தில் பிரிவு 03 உப பிரிவு 'அ' இன்படி சாவொறுப்பு வழங்கவேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது

மேலும் தனது தீர்ப்பில் நீதியாளர் குற்றத்தை விளக்குகையில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமி 11 வயதிலிருந்து பருவம் அடையும் மட்டும் எதிர் தனது இச்சையைத் தீர்த்து வந்துள்ளார் வறுமையில் வதங்கிய அச்சிறுமி மாலை நேர படிப்புகளுக்கு செல்வது எதிரியின் வீட்டு வாசலால் ஆகும். அந்நேரங்களில் எதிரி அங்கு நின்று அச்சிறுமிக்கு புத்தகம், கொப்பி, பென்சில் போன்றன வழங்கி தந்தை போல நடித்து காலக்கிரமத்தில் சிறுமி எதிரியின் வீட்டிற்குள் சாதாரணமாக உலாவக் கூடியவழிவகைகளை ஏற்படுத்தி தனது காமத்திற்கு அச்சிறுமியைப் பலியாக்கும வலையை அகல விரித்து வைத்தார். 11 வயதிலே விளைவுகளை அறிந்தும் அறியாததுமான அச்சிறுமி தனது தந்தைபோல பாசமழை கொட்டிய அக்கயவன் வலையில் சிறிது சிறிதாக விழத்தொடங்கினள். புத்தகங்கள், கொப்பிகள் அறையினுள் உள்ளது. தேவையானதை எடுத்துக்கொள் என சமயம்பார்த்திருந்த எதிரி தனது குடும்பத்தினர் இல்லாத நேரத்தில் கூறியதன் விளைவால் தங்குதடையின்றி வழமையாக அவை இருக்கும் அறைக்குள்சென்று அவற்றினை ஆசையோடு சிறுமி பிரித்து அடுக்கிக்கொண்டு இருந்தாள். இந்நேரத்தில் பின்னால் வந்த எதிரி கதவினைத் தாழ்ப்பாள் போட்டு தனது இச்சையைத் தீர்த்த பின்னர் காசும் கொடுத்து யாருக்கும் சொல்லக் கூடாதென இனிப்புகளும் வாங்கிக் கொடுத்தார். இவ்வாறு பல மாதங்களாகத் தான் அழிக்கப்படுவதை உணராத அச்சிறுமி பருவமடைந்த பின் அதனை நன்கு உணர்ந்தாள். அதனால் அன்றிலிருந்து எதிரியின் இச்சைக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு அங்கு செல்லாது தவிர்த்துக்கொண்டாள். இவ்வாறான காலங்களில் சிறுமியின் பிறந்த நாளுக்கு காப்பும், அதற்கு முன்னரான ஓர் நாளில் அச்சிறுமிக்கான உள்ளங்கியும் வாங்கிக் கொடுத்திருந்ததோடு சிறுமியைத் தனக்கு வளர்க்கத் தரும்படியும் அதற்கு ஒரு ரூபா முத்திரையில் கையெழுத்து வைத்துத் தருவதாகவும் சிறுமியின் பெற்றோரைக்கேட்டிருந்தார். வறுமையில் இருந்தாலும் அவர்கள் மறுப்புத்தெரிவித்து இருந்தனர். தனது இச்சையை தீர்ப்பதற்கு சந்தர்ப்பங்கள் இல்லாமையைக் கண்டஎதிரி முன்னைய நிகழ்வுகளை வைத்து சிறுமியை அச்சுறுத்தினர். இதன் விளைவால் கூடாத வார்த்தைகள் மதில் சுவர்களில் எழுதப்பட்டன. தொடர்ந்து சிறுமிக்கு மொட்டைக்கடிதம் வந்தது. அக்கடிதங்கள் நற்காலத்தால் பெற்றோரிடம் சிக்கியது இதனால் பிள்ளையை விசாரித்த பின்பு மேற்படி நிகழ்வுகள் வெளிக்கொணரப்பட்டன.

பசும்எண்ணங்கள் கொண்ட பிஞ்சு உள்ளத்தில்படிப்படியாக அடித்து இறக்கப்பட்ட இக் கொடூரம் தமிழீழத்தில் நிகழஒருபோதும் அனுமதிக்கப் படமாட்டாது. என்பதோடு இவ்வாறான செயல் புரிவோருக்கு கடுமையான ஒறுப்பு வழங்கப்பட வேண்டும் என்னும் அடிப்படையில் குற்றவாளிக்கு சாவொறுப்பு வழங்கப்பட்டது. -வி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-09-01**

வெள்ளி இரவு

8-02 கலைமஞ்சரி
1. அறிமுகம் ''விமானக் குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு'' எனும் கையேடு
2. சிறுகதை -போராளி சு. அமரேசன் எழுதிய ''விடியலை நோக்கி''
3. கவிதை- போராளி தேமா எழுதிய எப்படி இருந்த ஊர் இது''

8-25 கணப்பொழுது- கி, கண்ணம்மா எழுதிய ''வீர வேங்கை ஆனந்''
8-30 செய்திகள்
8-40 அரசியல் அரங்கம்- வே: பாலகுமாரன் எழுதிய ''தகுந்த நேரத்தில தமிழகத்திலிருந்து தக்க பதில்''
8-50 ஏர்முனை நிகழ்ச்சியில் ''மழையுடன் பயிரிடலாம்'' குறுநாடகம்

**1995-09-02**

சனி காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7 30 செய்திகள்
7 35 பத்திரிகைச் செய்திகள்
7-45 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-09-01**

வெள்ளி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிக்கீதம்
5-10 புதியவை
5-15 கனநேரக் காவியங்கள்
5-30 மண்ணின் குரல்
5-40 நேயர் கடிதங்கள்
5-45 நாடகம்
6-00 சிந்தனைக்குச் சில விடுகைகள்
6-02 வெற்றிச் சுவடுகள்
6 10 செய்திகள்
6 15 விளையாட்டுச் செய்திகள்
6-20 என் தெரிவு

## ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின்

4-வது இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

அம்பன் மகாவித்தியாலயத்தில்

3-9-95 காலை 8.00 மணி முதல் நண்பகல் 12 00 வரை

டாக்டர் M. யோகேஸ்வரதேவன்

— செயலாளர்

பருத்தித்துறை

(எ 5247)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ...



### மணிவாக்கு

உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகிறதோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்கும் கிடையாது.

சுவாமி விவேகானந்தர்

## நமது நோக்கு

### மணக்கொடைத் தடைச்சட்டம்

மனித சமூகம் வளர்ச்சியடையும் போது சமூக மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும். திராவிட நாகரீகத்தில் இல்லாத ஆனால் பின்னர் ஆரியத்தின் ஆக்கிரமிப்பினால் தமிழர்களிடையே பெண் அடிமைக்கோட்பாட்டுடன் சீதனம் என்ற பெண்களின் கீழ் நிலையை ஊர்ஜிதப்படுத்தும் கொடுப்பனவும் தமிழர்கள் மத்தியில் புகுத்தப்பட்டது.

தமிழ் மக்களின் சாயகம் ஐரோப்பியரால் ஆக்கிரமிக்கப்படும் வரை தமிழர்களின் ஆட்சியின் கீழ்த்தான் இருந்து வந்தது அந்தக்காலகட்டத்தில் வழமையிலிருந்த சமூக ரீதியிலான சட்டங்கள் ஒழுங்குகளில் சீதனக்கொடுப்பனவும் ஒரு அம்சமாக ஆண் ஆதிக்கத்தின் சின்னமாக இருந்து வந்தது. எம்மை ஆக்கிரமித்த ஐரோப்பியர்கள் தமிழர்கள் மத்தியில் வழக்கத்தில் இருந்த சமூக ஒழுங்கு முறைகளை மாற்றம் செய்யாது அவற்றை தொடரவிட்டு தங்களின் பொருண்மிய நலன்களை பேணுவதிலேயே கண்ணாக இருந்தார்கள், ஒல்லாந்தர்கள் ஒருபடி முன்னேறி தமிழ்மக்கள் மத்தியில் வழக்கத்திலிருந்த சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் ''தேச வழமைக்கோவை'' என்று கோவைப்படுத்தினார்கள். ஆங்கிலேயர்களிடம் ஆட்சி கைமாறிய போதும் அவர்களும் தமிழ்மக்கள் மீது தமது ஆட்சியை இந்தத் தேசவழமைக்கோவையின் அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தினார்கள். சீதனக் கொடுப்பனவும் பழைய முறையிலேயே தொடர்ந்து வழக்கத்திலிருந்தது.

பெண்கள் உடலமைப்பில் தவிர ஆண்களைவிட வேறெந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல. சரீர உழைப்பில் ஆண்களுக்கு ஈடாக அவர்கள் உழைப்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்கு முன்னர் கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இப்போ அவர்கள் கல்வி கற்கும் சந்தர்ப்பத்தை பெற்றுள்ளார்கள். அதுவும் கடும் போராட்டத்தின் ஊடாகத்தான். கல்வி கற்றதன் காரணத்தால் பெண்கள் ஆண்கள் புரியும். தொழில்கள் யாவற்றையும் செய்வதை நாம் காண்கிறோம். தமிழீழத்தில் பெண்கள் போராளிகளாக திறம்படத் திகழ்வது கண்கூடு. இந்த நிலையில் அவர்களை தொடர்ந்தும் பண்டப்பொருளாகக்காட்டும் சீதனக்கொடுப்பனவு கட்டாயம் ஒழிக்கப்பட்டேயாகவேண்டும்.

சீதனக்கொடுப்பனவை இல்லாமல் செய்வதென்று தமிழீழத் தேசியத்தலைவர் தீர்மானித்து விட்டாலும் அதை நடைமுறைப்படுத்த பல அமைப்புகள் தேவைப்பட்டன. நீதிமன்றுகள் தேவைப்பட்டன. அவற்றில் கடமையாற்ற சட்டவாளர்கள், நீதியாளர்கள், சட்டவாக்குப்பகுதியினர் தேவை. இதற்காக சட்டக்கல்லூரி உருவாக்கப்பட்டு சட்டவாளர்கள், நீதியாளர்கள், சட்டவாக்கப்பகுதியினர் உருவாகினர். நீதிமன்றுகள் நிறுவப்பட்டன. சட்டவாக்கங்கள் தயாரிக்கப்பட்டு தேசியத்தலைவரின் அங்கீகாரத்தோடு பிரகடனப்படுத்தப்பட்டன.

சீதனக்கொடுப்பனவை தடை செய்வதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த தேச வழமைச்சட்டம் மாற்றி அமைக்கப்படவேண்டியதாயிற்று. 1993ம் ஆண்டின் 3ம் இலக்க ''தமிழீழ தேச வழமை'' சட்டத்தின் மூலம் பெண்கள் தம் பிரத்தியேகச் சொத்துக்களையும் தேடிய தேட்டச்சொத்தின் அரைப்பங்கையும் கணவனின் எழுத்து மூலமான சம்மதம் இன்றி கையாளலாம் என்று சட்டம் இயற்றப்பட்டது.

இதற்கடுத்ததாகத்தான் இன்று தொடக்கம் அமுலுக்கு வரும் மணக்கொடைத் தடைச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி தமிழீழத்தில் இதுவரை காலமும் நிலவி வந்த மணக்கொடை கொடுக்கல் வாங்கல்களை தடை செய்யவும், உடமைகளைப்பகிர்வதனை ஒழுங்குசெய்யவும் இவ்ஒழுங்கு ஏற்பாடுகளை மீறுவோரை ஒறுப்பதற்கும், குமுக ஒழுங்கில் முற்போக்கான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், இதனாற்பெறும் குற்றக்காசுகளையும், பறிமுதல் உடைமைகளையும் பெண்கள் மறுவாழ்வுக்குப் பயன்படுத்துவதற்குமான ஏற்பாடுகள் தெளிவாகச் செய்யப்பட்டுள்ளன.

இன்று அமுலில் வரும் மணக்கொடைத்தடைச் சட்டம் தமிழ் மக்களின் சமூக வரலாற்றில் பெரும் திருப்பு முனையாகும்.

## வடக்கிற்கு உணவு அனுப்புவது குறித்த இலங்கை அரசுடனான ஐ.சி.ஆர்.சி. உடன்பாடு தற்காலிகமானது!

(மணிலா)

போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணப் பகுதியில் வாழும் மக்களுக்கு உணவு அனுப்புவது தொடர்பாக இலங்கை அரசும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒரு தற்காலிகமானதே என இலங்கை அரசு தெரிவித்ததாக 'வெரித்தாஸ்' அறிவித்தது.

இதன்படி யாழ்ப்பாணத்து மக்களுக்கு தற்காலிகமாக சர்வதேச செஞ்சிலுவைசங்கம் உணவு வழங்கும் என்றும் யாழ்ப்பாணத்து மக்களின் நிரந்தரமான தீர்வை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தாரிடமிருந்து எதிர்பார்ப்பது சரியல்ல என்றும் இலங்கை அரசு அறிவித்துள்ளது

இதேவேளை மனிதாபிமான முறையில் செய்யப்படும் இவ்வுதவியை தமிழ் உரிமையை நிலைநாட்டும் விதமாக தமிழின மக்கள் கருதில் கொள்ளக் கூடாது என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 'ராய்டர்' செய்தியாளரிடம் கூறினார்.

கே-ரி

## ✶ விவசாய உள்ளீடுகள் அனுப்பாமையினால் 79 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டின் விவசாய செய்கைக்கு வேண்டிய உள்ளீடுகள் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படாத காரணத்தினால் 79ஆயிரம் விவசாயக் குடும்பங்களும் 75 ஆயிரம் விவசாய கூலித் தொழிலாளர்களும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்

1995-ம் ஆண்டுக்கென யாழ். குடாநாட்டின் விவசாய தேவைக்கு 11,593 மெற்றிக் தொன் உரமும், 20 500 பரல் மண்ணெண்ணையும் தேவையாக உள்ள போதும் அரசு இவற்றை யாழ். குடாநாட்டிற்கு அனுப்பி வைக்கவில்லை.

இதனால் 10 365 ஹெக்டேயர் நெற்ச் செய்கையும் 7 ஆயிரம் ஹெக்டேயர் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையும் 4,400 ஹெக்டேயர் ஏனைய பயிர்களினதும் உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது.

இதே வேளை இராணுவம் கடந்த மாதம் மேற்கொண்ட முன்னேறிப்பாய்தல் ராணுவ நடவடிக்கையினால் வலிகாமதில் 17 கிராம சேவகர் பிரிவுகளில் 504 ஏக்கர் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் யாழ்ப்பாணத்தில் விவசாயத்தை நம்பி வாழும் மக்கள் தொடர் உற்பத்தகளை மேற் கொள்ள முடியாத நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ரி

## லண்டனில் அமெரிக்க விமானம் விழுந்து நொருங்கியது

(லண்டன்)

அமெரிக்க விமானம் ஒன்று லண்டனில் விழுந்து நொருங்கியதில் விமான பைலட் தலத்திலேயே கொல்லப்பட்டார்.

லண்டன் விமான நிலயத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இவ் விமானம் விழுந்து நொருங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

பொஸ்னிய யுத்த களத்திற்கு சென்று வேவுபார்க்கும் நடவடிக்கையில் இவ் விமானம் ஈடுபட்டுவந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

க-ரி

## மின்சாரம் தாக்கி சிப்பாய் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பில் மின்சாரம் தாக்கியதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் உள்ள கொக்கிளாய் சந்தி இராணுவ முகாமிலேயே மேற்படி சமபவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

வி-ரி

## ஹரி குணதிலக ராஜினமா

(கொழும்பு)

முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக, சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து ராஜினமா செய்யும் கடிதத்தை, நேற்று முன்தினம் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்துக் கையளித்துள்ளார்

இவர் முன்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியமான ஆதரவாளராக இருந்ததுடன், எயார் லங்கா பணிப்பாளர் சபையிலும் அங்கம் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ம-ரி

## காவியம் ஆனவர்கள்

கடல் அன்னை அமைதியாய் கிடந்தாள்
இருள் சூழ்ந்த அந்தப் பொழுது
ஏவல் பேய்களின் ஆக்கிரமிப்புக்குள்
கடல் அன்னை ஏங்கித் தவித்தாள் விடுதலைக்காய்

காலத்தால் அழியாத காவிய நாயகர்கள்
இருளைக் கிழித்து வண்ணக் கடலன்னையை
வணங்கி ஏவல் படைகளை துரத்த
பூகம்பமாய் எழுந்தனர் கரும்புலி வீரர்கள்

எத்தனை யெத்தனை மனித உயிர்களை
அழித்தது சிங்களத்து இராணுவங்கள்
இத்தனையும் பொறுத்தாள் கடல் அன்னை
இறுதியில் பொங்கி எழுந்தாள்

பெரும் புயலெனவே பாய்ந்தனர்
கரும்புலி வீரர்கள், ஏவல் பேய்கள்
கடலின் அடியில் மறைந்து போயினர்
அவலக் குரலுடன் தீப்பிழம்பு எழுந்தது.

கடலலைகள் மகிழ்ந்து பூரிப்படைந்தன
கரையில் வந்து முத்தங்கள் இட்டன
கடற்புலிகள் வரலாறு படைத்தனர்
தமிழ்த்தேசம் விடுதலை பெற்றது.

தமிழீழம் நாளை தலை நிமிரும்
உரிமைகள் பெற்று எம்மினம் வாழும்
சுதந்திரக் காற்று உறுதியாய் வீசிடும்
புலிக்கொடிகள் வானில் பறக்கும்.

— அமரேசன்

# கொள்கலனில் பல மணி நேரம் இருந்ததால் 18 பேர் மூச்சுத்திணறி உயிரிழந்தனர்!

## ஹங்கேரியில் உயிர் தப்பியவர் தகவல்

(சாவகச்சேரி)

கொள்கலனில் பல மணி நேரம் இருந்து பயணம் செய்ததமையால் பதினெட்டுப்பேர் மூச்சுத்திணறி பலியானதாக அண்மையில் ஹங்கேரியில் கொள்கலனில் அடைக்கப்பட்டு உயிர்தப்பி வந்திருக்கும் சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சரவணமுத்து சிவசுப்பிரமணியம் (43 வயது) என்பவர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக கூறியதாவது:

கடந்த ஜூலை மாதம் 12ம் திகதி இரவு சுமார் 10 30 மணி இருக்கும் ருமேனியாவில் ஏஜன்சி ஒருவரின் வழிநடத்தலில் கொள்கலன் ஒன்றில் இருமுனைகளில் இருந்து 24 பேர் ஒருபகுதியிலும் 14 பேர் அந்த மறுபகுதியில் மொத்தம் 38 பேர் அதில் அடைக்கப்பட்டு நாம் பயணத்திற்கு தயாராகினோம்.

வெற்றுக்கொள்கலன் பொதிகளுக்கிடையில் நாம் அடைக்கப்பட்ட பொழுது' இரு பகுதிக்கும் 25 லீட்டர் தண்ணீர் தரப்பட்டது அந்த வாகனத்தின் சாரதியிடம் வாகனம் நிறுத்தப்பட்டு இடை இடையே சுவாசிப்பதற்காக திறந்து விடுமாறு அறிவுறுத்தப்பட்டது

புறப்பட்டு சுமார் ஒரு மணித்தியாலம் ஆனதும் எமக்கு வியர்த்தது. வெப்பம் தாங்க முடியாமலும் மூச்சுத்திணற ஆரம்பித்தது. நாம் எமக்கு தரப்பட்ட தண்ணீரை முகங்களுக்கு தெளித்து ஓரளவு ஆறுதல் அடைந்தோம். சுமார் ஆறு மணி நேரம் அந்த வாகனம் சென்றுஇருக்கும். அது நிறுத்தப்படுவதாகத் தெரியவில்லை எமக்கு தரப்பட்ட தண்ணீர் முடிவடைந்ததால் நாம் மிகவும் அவதிப்பட்டோம்.

ஓடிக்கொண்டிருக்கும் அந்த பவுஸரை நிறுத்துவதற்காக காலால் உதைத்து சத்தத்தை எழுப்பி அபாயக் குரலும் கொடுத்தோம்,

சிறிது நேரத்தில் அது நிறுத்தப்பட்டு திறக்கப்பட்டது நாம் அடைக்கப்பட்ட கொள்கலன் திறக்கப்பட்ட பொழுது மேல் உலகத்திற்கு போய் மீண்டு வந்தது போல் இருந்தது

ஒருவாறு காற்றை உள்வாங்கி சுவாசித்துக் கொண்ட பொழுது பலர் அங்கு உயிருக்காக ஊசலாடிக் கொண்டிருந்தனர். பலர் முணுமுணுத்தபடி அழுது புலம்பினர்.

பல நாட்கள் ஒழுங்காக உணவு இல்லாதநிலை களைப்பு ஒரு புறம், எம்மை வாட்டியது

எம்முடன் பயணம் செய்தவர்களுள் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் என மொத்தம் 38 பேர் அடங்குவர் அனைவரும் உணர்வு அற்று இருந்த நிலையில் பவுசர் கதவு திறக்கப்பட்டது

பலர் இறந்துவிட்டதாக சாரதியிடம் தெரிவித்தோம் அவர்களை காட்டுக்குள் தூக்கி எறிந்துவிட்டு செல்வோம் என கூறிவிட்டு மறுபகுதிக்கு சென்று விட்டார். நாம் ஒவ்வொருவராக வெளியில் வந்து சுவாசிக்க முடியாதவர்களுக்கு இயன்றவரை செயற்கை சுவாசத்தை கொடுத்தோம்.

எமது பகுதியில் அடைக்கப்பட்ட 14 பேர்களும் ஒருவாறு தம்பித்துக் கொண்டனர்,

மறுபகுதியில் அடைக்கப்பட்ட 24 பேரின் நிலைதான் கவலைக்கிடமாக இருந்தது மறுபகுதியில் அடைக்கப்பட்ட பகுதியைத் திறந்து நாம் மீட்புப்பணியில் ஈடுபட்ட பொழுது இவர்களில் ஆறு பேரைத்தான் உயிருடன் மீட்கமுடிந்தது. எம்முடன் பழகிய ஒரே கோப்பையில் சாப்பிட்ட உற்ற நண்பர்கள் 18 பேரை நாம் இழந்தோம் அவர்கள் சுவாசிப்பதற்காகப் போராடிக் கொண்டிருந்த வேளை அவர்கள் மீது அங்கு பொதிகளுள் அடைக்கப்பட்ட வெற்றுக்கொள்கலன்கள் விழுந்த நிலையில் அதில் இருந்து மீள முடியாமல் அவர்கள் பலியானார்கள்,

சாரதியும் எம்முடன் வந்த மற்றொருவரும் தண்ணீர் எடுத்து வருவதாகக் கூறி காட்டுக்குள் தலைமறைவாகி விட்டார்கள். அவர்கள் நினைத்திருந்தால் அடைக்கப்பட்ட எமது கொள்கலன் கதவுகளை அடிக்கடி திறந்து எம்மைக் காப்பாற்றி இருக்கலாம். சுமார் ஆறுமணி நேரத்தின் பின் கதவு திறக்கப்பட்டதால் இத்துர்பாக்கிய நிலை ஏற்பட்டது.

நாங்கள் இறந்த சக நண்பர்களை அப்படியே விட்டுவிட்டு ஏனையவர்கள் வெளியே வந்து மெல்ல மெல்ல நகர்ந்தோம். அண்மையில் ஒரு கட்டத்தையும், சனக் கூட்டத்தையும் கண்டபொழுது, அது ஒரு தேவாலயமாக இருந்தது. அப்பகுதி ஹங்கேரி என்பதை உணர்ந்தோம்.

தேவாலயப் பகுதியில் இருந்த அந்த நாட்டுப் பொலிஸ்காரர்கள் எம்மை அழைத்து விசாரித்துவிட்டுச் செல்டர் மூலம் தொடர்புகொண்டு, வாகனம் ஒன்றை வரவழைத்து எம்மை அதில் ஏற்றிப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர் எம் மீது விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை இரண்டாம் நாள் ஹங்கேரியில் அநாதரவான நிலையில் இரண்டு பவுசர்களையும் அதில் 18 பேர்ன் இறந்த உடல்களையும் பொலிசார் மீட்டனர். தொலைக்காட்சியில் நாம் அதைப் பார்த்தோம்.

பொலிஸ் விசேட அதிகாரிகள் அழைத்துச் சென்று இறந்தவர்களின் உடல்களைக் காட்டி விபரங்களைக் கேட்டார்கள். நாம் தெரிந்தவற்றைக் கூறினோம்: உயிர் தப்பிய 20 பேர்களுள் ஒருவர் பாகிஸ்தானியர். மற்றவர் பங்களாதேஷைச் சேர்ந்தவர் 9 பேர் சிங்களவர். 9 பேர் தமிழர்கள்.

ஜேர்மனிக்குள் நுழைவதற்குச் செக்கோஸ்லவாக்கியா எல்லையைத் தாண்டச் சில மைல் தூரமே இருந்தது. செக்கோஸ்லவாக்கியா பொலிஸாரே எம்மைக் கைது செய்தனர். அங்குள்ள சிறிலங்கா தூதுவராலயம் இங்கு தொடர்பு கொண்டபொழுது, வெளிநாடுகளைச் சேர்ந்த பல அமைப்புக்கள் எம்மைப் பொறுப்பேற்க இருந்தபோதும் இலங்கையின் பதிலையடுத்து, நாம் திருப்பி அனுப்பப்பட்டோம். இறுதி நேரத்தில் எமது எதிர்ப்பு உணர்வுகளைக் காட்டியும் பலனளிக்கவில்லை. எங்கள் அனைவரையும் பலவந்தமாக திருப்பி அனுப்பி விட்டனர். 155-ரி

## கோப்பாய் ஆஸ்பத்திரியில் நோயாளர் அவதி

(நெல்லியடி)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் முறிந்த கட்டில்கள் பல மெத்தையின்றிப் பல வருடகாலமாக வைத்தியசாலையில் கிடக்கின்றன வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருவோர் இருப்பதற்கு கட்டில்கள் இல்லை. இதனால் பல நோயாளிகள் கால் கடுக்க பலமணி நேரம் காத்து நின்று தலைச்சுற்றினால் மயங்கி நிலத்தில் வீழ்கின்றனர்.

இவ்வாறு கோப்பாய் அரசினர் வைத்திய சாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்தோர் பலர் இவ் வைத்தியசாலையை நாடிவருவது குறிப்பிடத்தக்கது. தினமும் காலையும், மாலையும் சுமார் 400க்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்

இவ்வைத்தியசாலையில் பனடோல் குளிசை முதல் ஏ ஆர். வி. ஊசிமருந்து வரை பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 160-ரி

## நல்லின தென்னை நாற்றுக்கள் பொருண்மியத்தால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மக்களின் தேங்காய்த் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் நல்லின தென்னை நாற்றுக்களை உற்பத்தி செய்து நல்லூர் வட்டத்திற்கு உட்பட்ட மக்களுக்கு விநியோகம் செய்ய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுப் பகுதி நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

நல்லின தென்னை நாற்றுக்களை பெற்றுக்கொள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நல்லூர் வட்டச்செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. -கி

## நல்லை ஆதீனத்தில் சமய வகுப்புகள்

(கொழும்புத்துறை)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதினத்திலுல சமய பாடப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

தினமும் காலை 9-00 மணி முதல் 12 மணிவரை நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில் கற்பதற்கு வயதுக்கட்டுப்பாடுகள் எதுவுமில்லை என ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள் தெரிவித்தார்.

சமயபாடம் பயிலும் உயர்தர வகுப்புமாணவர்கள் இதனால் பயனடைய முடியும் எனவும் பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் நல்லை ஆதீன முதல்வர் கூறியுள்ளார். 154-சி

## இந்துஇளைஞர் பணிமனைசேதம்

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பிலுள்ள பண்டத்தரிப்பு இந்து இளைஞர் சங்க அலுவலகமும், நூல்நிலையமும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ''ட்ரகன் பயர், என்ற இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் பலத்தசேதம் விளைவிக்கப்பட்டுள்ளது

கட்டிட அறைக்கதவு உடைத்து உட்புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்த சங்க நூல் நிலைய சமய, இலக்கிய புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் கிழித்து வீசி எறிந்து சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர். 72-சி

## இடம்பெயர்ந்தோர்வீடுகளில் திருடர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிவருவதாக பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

தென்னை மரங்களில் உள்ள தேங்காய்கள், வாழைக்குலைகள் போன்றவைகள் கூட திருடர்களால் திருடப்பட்டிருப்பதாகவும் மண்வெட்டி, வாளி ஆகிய பாவனைப் பொருட்களும் திருடிச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். 162-கி

## இராசி பலன்

01-09-1995

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு ஆவணி-16]

ஸப்தமி சித்தயோகம் பின்னிரவு 2. 38 வரை, விசாகம் மாலை 5. 28 வரை. இராகு காலம் காலை 10 35 முதல் 12. 05 வரை, சுபவேளை வாலை 6. 05 முதல் 7. 3௦ வரை.

மேடம்: வீண்குறை கேட்டல், சஞ்சலம், செலவுமிகுதி.

இடபம்: செய் தொழில், விருத்தி, கௌரவம், காரிய வலுகூடல்.

மிதுனம்: பெரியோர் நட்பு, தெய்வ அனுகூலம், பணவரவு.

கடகம்: மனப்போராட்டம் கடன் தொல்லை, வீண் சந்தேகம்.

சிங்கம்: தேகசுகம் பாதிப்பு, தொழில் கஸ்டம், அலைச்சல்.

கன்னி: உறவினர் உதவி, குடும்ப சுகம், பயணம்.

துலாம்: கூடாத நட்பு, பணத்தட்டுப்பாடு, வேதனை.

விருச்சிகம்: அதிகாரிகள் பாராட்டு, உயர்ந்தசிந்தனை, தெய்வீக வழிபாடு.

தனுசு: முதியோர் தொல்லை, அவமரியாதை, வாக்குப்பகை.

மகரம்: தாயார் நினைவு, சுபவிரயம், நினைத்தது நிறைவேறல்.

கும்பம்: தொழில் சிறப்பு, இனிய சம்பாஷணை, தியானம்.

மீனம்: தொழில் நஷ்டம், வீண் விரோதம், கோப வார்த்தை.

— ஜோஸ்யர்

## அச்சுவேலி வைத்தியசாலை இரு இடங்களில் இயங்கும்

(கோப்பாய்)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதி மீண்டும் அச்சுவேலியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து புத்தூரில் இவ்வைத்தியசாலை இயங்கி வருகின்றபோதிலும் இடநெருக்கடி காரணமாக வெளிநோயாளர் பகுதி மீண்டும் அச்சுவேலிக்கு மாற்றப்பட்டுள்ளது. எனினும் வைத்தியசாலையின் நோயாளர் தங்கும் விடுதிகள் பாதுகாப்பு காரணங்களினால் புத்தூரில் தொடர்ந்து இயங்கி வருகின்றது. 166-கி

# உலகக் குத்துச் சண்டை விருதை டைஸன் பெறுவது உறுதி!" முகமட் அலி கூறுகிறார்

உலக அதிபாரக் குத்துச் சண்டையில் அன்று ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியவர் முன்னாள் சாம்பியன் முகமட் அலி (கஸியஸ் கிளே). இவர் உலக குத்துச்சண்டை அரங்கில் அடுக்கடுக்காக பலவெற்றிகளைக் குவித்துக்கொண்டிருக்கையில், தன் மனம் போன போக்கில் டாம்பீக வாழ்க்கையை நடாத்தினார்

யாருக்கும் கட்டுப்படாமல் முரட்டுக் குணங்களுடன், குத்துச்சண்டை அரங்கை தன் வசப்படுத்திக் கொண்டிருந்தார். ஈற்றில் கட்டாய இராணுவ சேவைக்குச் செல்ல மறுப்பு தெரிவித்ததற்காக நான்கு ஆண்டுகள் சிறை சென்றார்.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த கஸியஸ் கிளே சிறை சென்று திரும்பும்போது முஸ்லிம் மதத்தைத் தழுவி தன் பெயரை 'முகமட் அலி' எனவும் மாற்றிக்கொண்டார்.

புடம்போட்ட தங்கமாகச் சிறையிலிருந்து திரும்பிய முகமட் அலி, தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் பட்டத்தை மீண்டும் பெற்று குத்துச்சண்டை அரங்கில் ஒரு முடிசூடா மன்னராக இருந்து, பின்பு ஓய்வு பெற்றார். இன்று அவர் அமெரிக்க நாட்டின் சமாதானப் புறாவாக பல நாடுகளுக்கும் சென்று வருகிறார். குத்துச்சண்டை அரங்கில் தான் சம்பாதித்த கோடிக்கணக்கான பணத்தை உலகில் உள்ள கறுப்பின வறிய மக்களுக்காக குறிப்பாக சிறுவர்களுக்காக செலவு செய்து வருகின்றார்.

இதேபோன்றுதான் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு உலக அதிபாரக் குத்துச் சண்டை அரங்கின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த "மைக் டைஸன்" பெண் ஒருவருடன் தகாதமுறையில் நடந்து கொண்டதற்காக மூன்று ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துவிட்டு, முஸ்லிம் மதத்தைத் தழுவி, முஸ்லிமாக "மாலிக் அபதுல் அஸிஸ்" என்ற பெயருடன் தற்போது வெளிவந்துள்ளார்.

அமெரிக்காவின்சிக்காக்கோ நகரில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் மைக் டைஸன். இவர் சிறு பராயத்தில் பல திருட்டுக் குற்றங்களுக்காகவும் அடிதடி சண்டைகளுக்காகவும் பல தடவைகள் சிறுவர் சீர்திருத்த நிலையங்களில் அடைக்கப்பட்டவர். சிறுவயதிலேயே மிகவும் பலசாலியாக இருந்த இவரை, குத்துச்சண்டைப் பயிற்சியாளரான "கஸ்டி அமாட்டோ" என்பவர் பயிற்சி வழங்கி இவர் பலபரிசுகளையும் பெற்றார் படிப்படியாகவெற்றி மேல் வெற்றிகள் பெற்ற மைக் டைஸன் ஈற்றில் உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் பட்டத்தையும் பெற்றார்.

உலக குத்துச் சண்டை அரங்கில் கோடி கோடியாக பணத்தைச் சம்பாதித்த மைக் டைஸன், யாருக்கும் கட்டுப்படாமல் மனம்போன போக்கில் டாம்பீக வாழ்க்கை வாழ்ந்துகொண்டு உலகை வலம் வந்தார். இதனாலேயே இவர் சிறை செல்லவும் நேர்ந்தது.

முரட்டுக்காளையாக சிறை சென்ற மைக்டைஸனை, சாந்த குணம் உள்ளவனாகவும், பண்பான மனிதனாகவும், முஸ்லிம் மதப் பற்றுள்ளவனாகவும் மாற்றி சிறையிலிருந்து வெளியே கொண்டுவந்த

"தேவா"

பெருமை முன்னாள் உலக குத்துச்சண்டை வீரர் முகமட் அலியையே சாரும். இவர் சிறையிலிருந்த மைக்டைஸனை பலதடவைகள் அங்கு சென்று சந்தித்து முஸ்லிம் மதத்தின் போதனைகளை அவருக்கு பக்குவமாக எடுத்துக்கூறி மனம் மாறச் செய்ததுடன் சிறையிலிருந்து வெளிவந்ததும் பறிகொடுத்த அதிபார குத்துச் சண்டை சாம்பியன் பட்டத்தையும் மீண்டும் பெறவேண்டும் என்ற ஆர்வத்தையும் ஊட்டியுள்ளார்

1986-ம் ஆண்டு அதிபார குத்துச்சண்டை சாம்பியன் பட்டத்தைப் பெற்ற மைக் டைஸன் தொடர்ச்சியாக 41 போட்டிகளில் வெற்றிபெற்றார். எனினும் 1990-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 17ம் திகதி ஜப்பானில் நடைபெற்ற போட்டியில் ஜஸ்டர் மக்ஸலியிடம் தோல்விகண்டார். சிறையிலிருந்து மைக் டைஸன் திரும்பி ஒரு வாரத்துக்குள் நாலு போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார்

முதல் போட்டியாக இம் மாதம் 19-ம் திகதி பீட்டர் மக்லீனுடன் மோதினார் ஒட்டர் மக்லீன், மைக்டைஸனுடன் போட்டியில் கலந்து கொள்ள முன்பு 37-போட்டிகளில் கலந்து கொண்டு 36-போட்டிகளில் அமோகவெற்றி பெற்றவர். இவருடன் மைக் டைசன் முதல தடவையாக மோதுவதாலும், சிறை சென்றதால் போதிய பயிற்சியின்மையும், உடல் தளர்ச்சியும் கொண்டவராகவும் காணப்படுவதால், மைக்டைசனை பீட்டர் மக்லீன் இலகுவில் வெற்றிபெற்று விடுவார். என பெரும்பாலானோர் எண்ணினர்கள்.

ஆனால் மைக்டைஸனின் திறமையில் அசையாத நம்பிக்கை கொண்ட முகமட்அலி "இப் போட்டியில் மைக்டைசன் 3-வது வட்டத்தில் வெற்றி பெறுவார்" எனக் கூறினார். ஆனால் நடந்தது என்ன? போட்டி ஆரம்பமாகி 2-வது வட்டத்திலேயே மைக்டைஸனின் மின்னல் வேகக் குத்துக்களை தாங்கமுடியாத பீட்டர் மக்லீன் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக, மத்தியஸ்தரிடம் தெரிவித்து விட்டார். அரங்கில் இருந்து ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஆச்சரியத்தில்மூழ்கினார்கள். மைக்டைசனுக்கு முதலில் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்த முகமட்அலி "அதிபாரகுத்துச் சண்டைசாம்பியன் பட்டத்தை மைக்டைசன் பெறுவது உறுதியாகி விட்டது" எனப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். அடுத்த மாதம் 2-ம் திகதி மைக்டைசன், பிராங்புறுனோவுடன் மோத இருக்கிறார். வி

# வடமராட்சியில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உதைபந்தாட்டச் சங்கம் தமது வலயத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே ஏழு வீரர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நாளை 2ம்திகதி முதல் நடாத்தவுள்ளது.

இந்த நொக்கவுட் போட்டியில் மொத்தம் 30 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன இம்முறை இப் போட்டிகள், வல்வை திருவில் மைதானம், துன்னாலை ஞானம்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், வதிரி பொமேர்ஸ் கழக மைதானம் ஆகிய மூன்று மைதானங்களில் நடைபெறவுள்ளது. 2ம், 3ம், 4ம் திகதிகளில் நடைபெறும் போட்டிகள் வல்வை திருவில மைதானத்திலும், 5ம், 6ம், 7ம் திகதிகளில் நடைபெறும் போட்டிகள் துன்னாலை ஞானம்ஸ் கழக மைதானத்திலும்; 9ம், 10ம், 11ம், 12ம் திகதிகளில் நடைபெறும் போட்டிகள், வதிரி பொமேர்ஸ் கழக மைதானத்திலும் நடைபெறவிருக்கின்றது.

நாளை 2ம் திகதி வல்வை திருவில் மைதானத்தில் நடைபெறவிருக்கும் இரு போட்டிகளின் முதல் ஆட்டத்தில் ஆதிசக்தி கழகத்தை எதிர்த்து வல்வை ஒற்றுமை கழகமும், 2-வது போட்டியில் சுடரொளி கழகத்தை எதிர்த்து விக்கிரமன் கழகமும் மோதும்.

இச்சுற்றுப் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் வடமராட்சி உதைபந்தாட்டச்சங்க செயலாளர் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. -வி

# "மண்ணை, மக்களை நேசித்த மாவீரர்கள் அழியவில்லை!"

(நெல்லியடி)

தமிழ் மண்ணையும், மக்களையும் நேசித்த மாவீரராகியவர்கள் அழியவில்லை. அவர்கள் எமது போராட்டத்தில் புதிய வளர்ச்சியை ஏற்படுத்தி எம், கண்முன் நாம் எப்படி வாழ வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகிறார்கள்.

இவ்வாறு மணலாறு இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த மாவீரரது நினைவஞ்சலிக் கூட்டம் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற போது பேசிய யாழ் மாவட்ட அரசியல் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இளையவன் குறிப்பிட்டார்.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இளையவன் தொடர்ந்து பேசுகையில் தமிழீழ விடுதலை போராட்டமானது ஒரு பரிணாம வளர்ச்சியடைந்து வருகின்றது. 2ம் ஈழப் போர் முடிவிலும், 3ம் ஈழப் போர் நடவடிக்கையிலும், ரணசுரு, சூரயா அதன் பின் 16 மணி இடைவேளையில் 2 விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டமை, தென் தமிழீழத்தில் கட்டு முறிப்பு இராணுவ முகாம் தகர்ப்பு, மண்டைதீவு முகாம் தகர்ப்பு, முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை, அவ்ரோ தகர்ப்பு, ஹெலி அழிப்பு, போன்றவைகளுடன் அதிகளவு படையினரையும் அழித்து சேதம் ஏற்படுத்தியது எமது புலிப்பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையாகும்.

எதிரி நேரசூசியின் படி தம்மை இழக்கும் நிலையில் 3ம் கட்ட ஈழப்போர் பெரும் வெற்றியை எமக்குத் தந்துள்ளது. என்றும் குறிப்பிட்டார். 160-வி

## நிலாவெளியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முரசன் சந்நிதி பொன்னம்பலம் குணசீலன் கரணவாய் லெப். ஜீவகன் (ஜீவன் முத்துலிங்கம் அமரவேல அல்வாய் லெப். கணேஸ் திருமாறன் கந்தையா பாலச்சந்திரன் கரவெட்டி. ஆகியோரின் திருவுருவப்படங்கள் இன்று முதலாம் திகதி பி. ப 2-00 மணியளவில் அவரவர் இல்லங்களிலிருந்து எடுக்கப்பட்டு மக்கள் இறுதிவீரவணக்கத்திற்காக நெல்லியடி பேருந்து நிலையத்தில் அமைக்கப்படும் விசேட பந்தலில் வைக்கப்படும்.

அங்கு மாலை 4-00 மணியளவில் இறுதி வீரவணக்கக் கூட்டமும் நடைபெற்று நிறைவுற அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரர்களின் நினைவுக்கற்கள் நாட்டப்படும்.

இதேமோதலில் வீரச்சாவடைந்த லெப். செல்வம் சுப்பிரமணியம் சுரேஸ்கரன் பொன்னம்பலம் வீதி அரியாலை, லெப். துன்பன் (கீர்த்தி யோகேஸ்வரக் குருக்கள் கிருஸ்ணராஜ சர்மா வேலணை த. மு: 43—4 புதுவீதி அத்தியடி, வீரவேங்கை நல்லவன் லோறன்ஸ் குமார் மட்டக்களப்பு த. மு: 4 கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி வண்ணார்பண்ணை ஆகியோ திருவுருவப்படங்கள் அவரவர் இல்லங்களிலிருந்து பி-ப 3-00 மணியளவில் எடுக்க ஆரம்பிக்கப்பட்டு மக்கள் இறுதி வீரவணக்கத்திற்காக யாழ் புகையிரத நிலையமுகாமில் வைக்கப்பட்டு அங்குமாலை 4-00 மணியளவில் இறுதி வீரவணக்க கூட்டமும் நடைபெற்று நிறைவுற அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரர்களின் நினைவுக்கற்கள் நாட்டப்படும். இ

## ஹெலி

(1ம் பக்க தொடர்ச்சி)

யினருக்குமிடையே ஏற்பட்ட மோதலின்போதே படையினருக்கு உதவியாக வந்த தாக்குதல் விமானத்துக்கும் உலங்குவானூர்திக்கும் விடுதலைப் புலிகள் சுட்டதாக தெரியவருகிறது. ர-கி

## ராமராவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது.

இதேவேளை நேற்றுக் காலை உடல் நலக்குறைவினால் திரு. ராமராவ் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

ஆந்திர மாநில ஆளுநர் திரு. கிருஷ்ணகாந்த் மருத்துவ மனைக்கு நேரில் சென்று ராமராவின் உடல்நிலை குறித்து விசாரித்தார். மருத்துவ மனையில் ஆளுநரிடம் ராமராவ் கடிதம் ஒன்றை கையளித்திருந்ததாக முன்னர் வந்த செய்திகள் தெரிவித்தன

ராமராவ் ராஜினாமாச் செய்துவிட்டதையடுத்து ஆந்திர முதல்வராக அவரது மருமகன் சந்திரபாபுநாயுடு இன்று பதவியேற்கவுள்ளார். சி-கி

# சோனியா காந்தி தென்னாபிரிக்கா விஜயம்

(கேப் ரவுண்)

ராஜிவ்காந்தியின் மனைவி சோனியாகாந்தி தனது இரு பிள்ளைகளுடனும் நேற்று தென் ஆபிரிக்காவுக்கு வந்து சேர்ந்துள்ளார்.

ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், மற்றும் அதிபர் மண்டேலாவின் அழைப்பின் பேரில் வந்துள்ள திருமதி சோனியா நேற்று திரு. மண்டேலாவை சந்தித்து உரையாடினர்.

ஜனநாயகத் தேர்தலின் பின் தென்னாபிரிக்காவில் வரலாற்று சிறப்பு மிக்க மாற்றங்களை பார்வையிடவும், இளைஞராக மகாத்மா காந்தி இங்கு வாழ்ந்ததை கொண்டாடும் வகையிலும் தான் இப்பயணத்தை மேற்கொண்டிருப்பதாக திருமதி சோனியா கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் ஆறு நாள் பயணத்தை மேற்கொண்டுள்ள திருமதி சோனியாவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது கே-வி

# பரிசளிப்பு விழா

(அரியாலை)

யாழ் காப்புறுதிக் கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் யாழ் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்றது. 59-கி

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணை அரசு தரப்பினால் தாமதமாகாதாம்

(சென்னை)

திரு. ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமான வழக்கு விசாரணையில் அரசுதரப்பினால் ஒருநாள்கூட தாமதமாகாது என சிறப்பு புலனாய்வு குழுவின் தலைவர் டி ஆர். கார்த்திகேயன் கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் அவர் செய்தியாளரிடையே பேசுகையில் 1991 மே 21ம் திகதி ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட பின் இந்த வழக்கின் புலன்விசாரணையை மேற்கொண்டபோது கொலையாளிகளின் அடையாளம் பற்றியோ, கொலைக்கான நோக்கம் குறித்தோ எந்தவித தகவலும் இல்லையென்றும், கடுமையான புலன் விசாரணைக்கு பின்னர் ஓராண்டுக்குள் அதாவது 1992 மே 20ம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது என்றும் கூறினார்.

சுமார் 10 ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதாகவும் இவற்றின் நகல்கள் குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டதோடு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குற்றப்பத்திரிகையின் தமிழாக்கமும் அளிக்கப்பட்டதாகவும் திரு. கார்த்திகேயன் கூறினார்.

இந்த வழக்கு விசாரணையில் ஏற்பட்ட தாமதங்கள் பற்றி விளக்கிக்கூறிய திரு கார்த்திகேயன், இந்த தாமதங்கள் அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்று தெரிவித்தார்.

ஜெயின் கொமிஷன் விசாரணைக்கும் சிறப்பு புலனாய்வுக்குழு முடிந்த அனைத்து உதவிகளையும் அளிக்கும் அதே வேளை தனி நீதிமன்றில் நடைபெறும் விசாரணையின் முக்கியத்துவம் குறையாமலும் பார்த்துக்கொள்ளப்படும் என்றும்அவர் மேலும் கூறினார். கே-வி

# புலிகளின் தாக்குதலுக்கு இரு தினங்களில் 62 படையினர் பலி; 87 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களில் மாத்திரம் சிறிலங்கா பாதுகாப்பு படை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் மொத்தம் 62 படையினரை இழந்துள்ளது 2 சுப்படோரு படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு பொலிஸ் நிலையம் அழிக்கப்பட்டுள்ளது டிரக் ஒன்றும் தகர்க்கப்பட்டது

கடந்த திங்களன்று அம்பாறை கஞ்சிகுடிச்சாறில் 3 விசேட அதிரடிப் படையினர், மன்னாரில் 2 இராணுவத்தினர், யாழ்ப்பாணம் கட்டுவனில் 2 இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் நிலைய தாக்குதலில் 11 பொலிசாரும், பின் காயப்பட்ட பொலிசாரை எடுத்துச் செல்கையில் 15 பொலிசாரும் புலிகளின் தாக்குதலால் கொல்லப்பட்டனர்.

களவெட்டியில் முன்னேறிய படையினரைத் தாக்கியதில் 10 இராணுவத்தினர் பலியாகினர்

முல்லைத்தீவு கடற்பரப்பில் இரு சுப்படோரு படகுகள் மூழ்கடிக்கப்பட்டதில் 21 கடற்படையினர் பலியாகினர்

மேற்படி விடுதலைப்புலிகளின் தாக்குதல்களின் போது 87 படையினர் படுகாயமடைந்தனர். கே-கி

## காணமல்போன

(1ம் பக்க தொடர்ச்சி)

திலன் உட்பட மொத்தம் 144 பேர் இருந்ததாகவும் இவர்களில் 58 பேர் பெண்களெனவும் கொழும்பை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. தெரிவித்தது.

கப்பலை மீட்டுத் தரும் படி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இதுவரை பதிலளிக்கவில்லை என பி. பி. ஸி. தெரிவிக்கின்றது. கே-க-கி

# அ.தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டணி அமைக்காது

## மதுரையில் ராவ் அறிவிப்பு

[சென்னை]

அ. தி. மு. க. வுடன் இந்திரா காங்கிரஸ் கட்சி தேர்தல் கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொள்ளாது.

இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவ் நேற்று மதுரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் குண்டுதுளைக்கமுடியாத கண்ணாடிக் கூட்டினுள் இருந்தவாறு ராவ் அங்கு உரையாற்றினர். கி

## நீர் வழங்கல் நிறுத்தம்

(யாழப்பாணம்)

யாழ். மாநகரசபையின் நீர் வழங்கும் பவுசர் திருத்த வேலைக்குட்படுத்தப்பட்டிருப்பதால் சில பகுதிகளுக்கான நீர் வழங்கல் ஒரு வார காலத்திற்கு நடைபெறமாட்டாது என மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். கி

# எலக்ரோனிக் கருவிகளை எடுத்துவர முயன்றோர் கைது

(கொழும்பு)

வவுனியா ஈரப்பெரியகுளத்தில் மிகவும் சக்திவாய்ந்த எலக்ரோனிக் கருவி ஒன்றை கடத்திச் செல்ல முயன்ற சாரதியும் சிப்பந்தியும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தப் பொருட்களின் உரிமையாளரும் கைதுசெய்யப்பட்டார்.

ஒருவர் 300 மைல் சுற்று வட்டத்திற்குள் தாம் எங்கே இருக்கிறார் என்பதை எலக்ரோனிக் முறையில் கண்டுபிடிக்க கூடியதும், எலக்ரோனிக் முறையை பயன்படுத்தி எல்லாவிதமான அன்ரனைக்களையும் இயக்க வைக்கக் கூடியதுமான இச் சாதனங்கள் மிகவும் சக்திவாய்ந்தவை என பொலிசார் தெரிவித்தனர். கே-கி

## கல்விச்சேவை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை இம் மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறுமென யா. மாவட்ட அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்து அறிவித்துள்ளார் 162-கி

# தொடரும் யுத்தத்தினால் பெரும் பணவீக்க அபாயம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: அந்நிய முதலீட்டை பெருக்கும் முயற்சியில் தென்னாசிய நாடுகளுக்கு அனுசரணையாக செயற்பட வேண்டிய இலங்கை அரசு அண்மைய யுத்த நடவடிக்கையால் பெரும் பணவீக்கத்தை எதிர்கொள்வது துர்அதிஷ்டவசமானது என்றும் தெரிவித்தார். க-கி

## 158 றிசேர்வ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்களுள் விடுமுறையில் சென்று இதுவரையில் திரும்பி வராதோரும் அடங்குவர் என்றும் மேலும் அறியப்படுகிறது. க கி

# ‘வரணியூரான்’ கணேசபிள்ளை கொழும்பில் சுட்டுக் கொலை

(கொழும்பு)

‘வரணியூரான்’ என அழைக்கப்படும் பிரபல வானொலி தொலைக்காட்சி நகைச்சுவை நடிகரும் எழுத்தாளருமான எஸ். எஸ். கணேசபிள்ளை நேற்றுமுன்தினம் இளைஞர் ஒருவரால் மருதானையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்

‘பளுகர் பொன்னையா’ நாடகத்தின் மூலம் புகழ்பெற்ற வரணியூரான் மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர், கடந்த சில வருடங்களாக கொழும்பில் வசித்து வந்தார்.

கடந்த அரசு காலத்தில் இலங்கைவானொலியில் தொடர்ச்சியாக ஒலிப்பரப்பாகிவந்த ‘மக்கள் குரல்’ என்ற நிகழ்ச்சியை இவரே தயாரித்தளித்து வந்தார்.

இக்கொலையை அடுத்து அப்பகுதியிலிருந்து கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் பொலிசாரால் சடலமாக கொழும்பு வைத்திபசாலையில் ஒப்படைக்கப்பட்டார்.

இவ்விளைஞர் பலாலியைச் சேர்ந்தவரெனவும் அவரது பெயர் சிவஞானசுந்தரம் சிவநேசரன் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். கே-க-கி

## பஞ்சாப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தில் பணி புரிந்தவர். பின்னர் இவர் அரசியலுக்குள் நுழைந்து 1992ம் ஆண்டு இந்திரா காங்கிரஸ் கட்சியின் பஞ்சாப் மாநில அரசின் முதல்வராகத் தெரிவாகியிருந்தார். கி

## ஐரிஸ்மோனாவின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பல் எங்கேநிற்கின்றது என்பதைத் தகவலறிந்து கூறுமாறு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் கேட்டுள்ளது;

ஐரிஸ்மோனா கப்பல் முல்லைத்தீவுக்கு வடக்கே உள்ள சுலிலி என்ற கிராமத்துக்கு தெற்காக கரையிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் நங்கூரமிட்டு நிற்பதாக அரசு முன்னர் தெரிவித்திருந்தது. -கி


பார்த்தவர்களின் பாராட்டினைப் பெற்று

4 வது ஜனத்திரள் வாரத்தை நோக்கி வெற்றி நடை போடுகிறது

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

தினசரி: 2.30, 4.30, 6.30

சனி, ஞாயிறு 10.30, 2.30, 4.30, 6.30

நிதர்சனமும்

மட்டு – அம்பாறை சிறப்புப் படையணியும்

இணைந்து வழங்கும்

சி. சேரனின்

உறங்காத கண்மணிகள்

[வேவுப் புலி வீரரின் உண்மைக் கதை - கலர்]

அரங்கு நிறைந்த காட்சியாக

காண்பிக்கப்படுகிறது

(எ5248)


## இந்தியப் படையால்

(1ம் பக்க தொடர்ச்சி)

‘ராய்ட்டர்’ செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனை தெரிவித்திருக்கின்றார்.

இந்தியப் படையினரால் செய்ய முடியாத ஒன்றை எம்மால் செய்யமுடியுமென எதிர்பார்ப்பது பெரும் நகைப்புக்குரியதெனவும் அவர் கூறியிருக்கின்றார்.

இந்தியப்படை 1987 காலப்பகுதியில் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் வலுவான நிலையில் நிலைகொண்டிருந்த வேளையிலேயே அவர்களால் பிரபாகரனை பிடிக்க முடியவில்லை;

அப்பொழுது தமது இயலாமையினால் சந்தர்ப்பத்தை நழுவவிட்ட இந்திய அரசு இப்பொழுது சோனியா காந்தி குற்றம் சாட்டும் போது இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறது;

இந்தியப் படையினரால் அவரைக் கைது செய்ய முடியாத போது இலங்கை அரசினால் எப்படி முடியுமெனவும் அவர் கேள்வி எழுப்பினார். ம-க-கி

# மரணக் கொடுப்பனவு பெற 1927 பேர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையின்போது இறந்தோர் காயப்பட்டோருக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்குதற்காக 6 கோடியே 92 லட்சம் ரூபா தேவைப்படுவதாக யாழ் செயலக புனர்வாழ்வு பகுதியினர் தெரிவித்துள்ளனர்

கடந்த 1987ம் ஆண்டு முதல் இதுவரை அதாவது ஏற்கனவே நஷ்டஈடுவழங்கப்பட்டோரைவிட மரணம் சம்பந்தமாக 1927 பேர் இதற்கான நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர். 1227 பேர் காயம் சம்பந்தமான நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களைவிட மேலும் பலர் மரணம், காயம் சம்பந்தமான நஷ்டஈடுபெற விண்ணப்பிக்கவுள்ளனர.

இவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியினர் நிதி இன்றி பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதனால் இக் கொடுப்பனவை வழங்குவதற்கு 6 கோடி 92 இலட்சம் ரூபாவை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு செயலக புனர்வாழ்வு பகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சை கோரவுள்ளது. 170-கி

## சந்திரிகாவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் றிவோல்வரினால் சுட்டுவிட்டு தப்பி ஓட முயன்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது;

துப்பாக்கியினால்சுட்ட இந்த நபர் பின்னர் கைது செய்யப்பட்டார். ம-கி

# இளம்பிள்ளைவாத நோய் எதிர்ப்பியக்கம் செயற்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டம் பூராகவும் இளம்பிள்ளைவாத நோய் ஒழிப்பு இயக்கம் எதிர்வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் செயற்படவுள்ளதாக யாழ் சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்நோய்க்கான தடுப்பூசி மருந்துகளின் சிறுதொகுதி யாழ்ப்பாணம் வந்துள்ளது. தடுப்பூசி மருந்துகள் முழுவதும் யாழ். வந்ததும் இளம்பிள்ளை வாத நோயை கட்டுப்படுத்துவதற்கான இயக்கம் ஆரம்பிக்கப்படும்;

இவ் இயக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் நாலாம் திகதியும், டிசம்பர் மாதம் 5ம் திகதியும் செயல்படும்.

யாழ், மாவட்டத்தில் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் இந்நோய்க்கான தடுப்பூசி மருந்துகளைக் கொடுப்பதால் சமூகரீதியான நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டுவதே இந்த இயக்கத்தின் நோக்கமாகுமென்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். 170-கி

# ஒய்வூதிய வவுச்சர்கள் ‘ஹெந்தல’வில் வருகின்றன

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட ஒய்வூதியர்களுக்கான செப்டெம்பர் மாத ஒய்வூதிய வவுச்சர்கள் இம்மாதம் 6ம் திகதி பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துசேரவிருக்கும் ‘ஹெந்தல’ கப்பலில் எடுத்துவரப்படவுள்ளது.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து நாளை 2ம் திகதி சனிக்கிழமை திருகோணமலைக்குச் செல்லும் இக்கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தில் யாழ் மாவட்டத்துக்கான 2000 மெற்றிக் தொன் கோதுமை மாவை ஏற்றிக்கொண்டு இம்மாதம் 6ம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்துசேரும்;

இதேவேளை யாழ் மாவட்டத்துக்கான அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு ‘லங்கா கல்யாணி’ கப்பல் பருத்தித்துறைதுறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டுள்ளது;

இக்கப்பல இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுவதாகவும் இக்கப்பலில் அரிசி, சீனி, பருப்பு, பால்மா அடங்கிய 2200 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றுமொரு கப்பலான ‘மாகோ’ கப்பலில் 6900 பரல் மண்ணெண்ணை மற்றும் 1000 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்களும் எடுத்து வரப்படுகிறது. இக்கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தசேருமென எதிர்பார்க்கப்படுகிறது; 162 170 கி

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.